## புத்தசாசன நிதியம் - 2014

புத்தசாசன நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, நிதிய மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புத்தசாசன நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் படி முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற ரூபா 155,380 கிரயமான கணனிகள் மற்றும் உபகரணங்களின் நியாயப் பெறுமதியை காண்பிக்காமையினால் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 40,000 தொகையான சாமனேர நிறுவனப் படி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதிப்பிழந்த காசோலைக்குப் பதிலாக புதிய காசோலையொன்றை வழங்கும் போது காசோலை மதிப்பிழந்த கணக்கில் வைக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 98,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) விற்பனைக்காக தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 11,944,380 தொகையான புத்தக இருப்புக்கள் நான்கு வருட காலம் முதல் பெறவேண்டிய முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் அளவு உரியவாறு இனங்கண்டு உரிய சீராக்கங்களைச் செய்து சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புத்தக விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 50,840 இலாபம் வருமானச் செலவினக் கணக்கில் செலவு வைக்கப்படாமல் நேரடியாக புத்தசாசன நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் மிகை அந்தப் பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது,

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கொடுக்கல் வாங்கல் விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | பௌத்த தர்ம புத்தகங்கள் | 14,613,004 | விபரங்களை உள்ளடக்கிய பதிவேடு, மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| (ஆ) | புத்தக விற்பனை வருமானம் | 1,007,982 | விற்பனை வருமான அறிக்கை, பற்றுச் சீட்டு |
| (இ) | பாலி டீக்கா சிங்கள மொழிபெயர்ப்பிற்காகச் செலுத்த வேண்டிய பணம் | 544,409 | மீதி உறுதிப்படுத்தல்கள் |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பாளி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தவேண்டிய ரூபா 325,000 தொகை 2007 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் அந்தப் பல்கலைக்கழகத்தின் தகவல்களின் படி அவ்வாறான பொறுப்பொன்று நிதியத்தில் காணப்படாதிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக பரிசோதனை செய்து தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டம் | |
| (i) 4.1 ஆம் பிரிவு | கட்டுப்பாட்டுச் சபைக்கு ஒத்துழைப்பு வழங்கவும் ஆலோசனை வழங்கவும் மதியுரைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 17 ஆம் பிரிவு | நிதியம் வருமான வரிகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானங்களிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 578,481 தொகையான வரித்தொகையை மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீ.எப் 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | |
| (i) 4.2(ஆ) பந்தி | மீளாய்வாண்டில் 09 சந்தர்ப்பங்களின் போது கையேற்கப்பட்ட ரூபா 47,960,300 பெறுமதியான நன்கொடைகளை உள்ளடக்கிய ஏனைய பெறுவனவுகளுக்காக பற்றுச்சீட்டு |

வழங்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ii) | 4.2(இ) பந்தி | வங்கிக் கணக்கு தொடர்பான புத்தகங்களுடன் இணக்கஞ் செய்து காலாண்டு ரீதியாக அறிக்கை தயாரித்து பொது நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 4.3 பந்தி | கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் நிதியம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களும் செயலாற்றல் அறிக்கையும் பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் கணக்குகள் 2015 மே 11 ஆந் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதன் பிரதியொன்றும் பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

| | |
|---|---|
| நிதிப்பிரமாணம் 754 | நிதியத்தினால் பொருட் பதிவேடு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது முறையான பிரகாரம் பேணப்படாதிருந்ததுடன் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் அமைச்சிலிருந்து கிடைத்த பொருட்கள் பொருட் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டு கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதியத்திற்குச் சொந்தமான பொருட் பதிவேடு சமப்படுத்தப்பட்டிருக்க வில்லை. |

**2.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிதியத்திற்குக் கிடைத்த மொத்த நன்கொடை பணத்தில் 84 சதவீதம் அதாவது ரூபா 57,105,404 தொகை தனியார் கம்பனியொன்றிலிருந்து கிடைத்திருந்ததுடன் அந்த நன்கொடை நிதியத்தின் ஊடாக விகாரை அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட புத்தர் சிலையொன்றை வடிவமைக்கும் செயற்பாடுகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த நன்கொடை மாற்றுவதற்காக நிதியம் நடுவராக செயற்படுதல் நிறுவனத்தின் நோக்கங்களுக்கு இணங்காதிருந்ததுடன் இதன் மூலம் அரசாங்கத்திற்கு இழக்கப்பட்ட வரி வருமானம் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.6 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல், வாங்கல்கள்**

(அ) வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் தேறாத ரூபா 76,089 தொகையான வைப்புக்கள் பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 3 அரசாங்க வங்கிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 432,035,581 கூட்டுத்தொகையான திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் ஆரம்பிப்பதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் நிதியத்திற்குக் கிடைத்த நன்கொடைகளிலிருந்து 1 சதவீதம் அதாவது ரூபா 450,226 தொகை உரிய அதிகாரமின்றி நிதியத்தின் வருமானமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் வருமானம் மற்றும் செலவினம் முறையே ரூபா 39,502,102 மற்றும் ரூபா 7,100,198 ஆனமையால் அதன் நிதி விளைவுகள் ரூபா 32,401,904 மிகையாக இருந்தது. அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானம் மற்றும் செலவினம் முறையே ரூபா 45,604,422 மற்றும் ரூபா 3,623,195 ஆனமையால் முன்னைய ஆண்டின் மிகை ரூபா 41,981,226 ஆக இருந்தது. அதன் படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 9,579,322 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. மீளாய்வாண்டின் முதலீட்டு வருமானம் ரூபா 7 மில்லியனால் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தசாசன நிதியத்தின் செயற்பொறுப்பாக புத்தசாசனத்தைப் பாதுகாத்தல் மற்றும் போஷித்து வளர்த்தல் மிகவும் யோக்கியமுள்ள கட்டுப்பாட்டுச் சபை கவனமெடுக்கின்ற முறை மற்றும் அவ்வாறு கவனமெடுக்கின்ற செயற்பாடுகளுக்காகவும் பணத்தைப் பயன்படுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 441 மில்லியன் முதலீட்டினைக் கொண்ட புத்தசாசன நிதியத்தின் மூலம் புத்தசாசனத்தின் முன்னேற்றத்திற்காக ஒட்டுமொத்த வருமானத்தில் ரூபா 7 மில்லியன் அதாவது 18 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. அதனால் பண முதலீட்டிலிருந்து வட்டி சேகரித்தல் தவிர புத்தசாசனத்தின் முன்னேற்றத்திற்காக நிதியத்திலிருந்து கவனத்தில் கொள்ளக்கூடிய செயற்பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) புத்தசாசன நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி பாளி அதிகதாவை சிங்களத்திற்கு மொழி மொழிபெயர்த்தல், அச்சிடல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகள் தனியார் அச்சகத்திற்கு கையளிக்கப்பட்டு அதற்காக 4 சந்தர்ப்பங்களின் போது ரூபா 7,489,275 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு புத்தகங்கள் அச்சிட்டு விற்பனை செய்ததால் நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 3,696,212 தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட மற்றும் அச்சிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை, விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை, எஞ்சிய புத்தகங்களின் எண்ணிக்கை என்பவற்றை வெவ்வாறாக இனங்காணக்கூடிய வகையில் நிதியத்தினால் பதிவேடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் தனியார் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தது.

(iii) புத்தகங்கள் மொழிபெயர்ப்பு செய்தல் மற்றும் அச்சிடல் தொடர்பாக முறையான கட்டுப்பாட்டைப் பேணுவதற்கு நிதியத்திற்கு இயலாதிருந்தது.

(இ) 12 பாளி கதைப் புத்தகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்காக முற்பணமாக ரூபா 1,080,165 தொகை தனியார் நிறுவனமொன்றிற்கு 2010 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. 12 கதைப் புத்தகங்களில் 06 புத்தகங்கள் மாத்திரம் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் இந்த அச்சிடப்பட்ட புத்தகங்கள் எதுவும் நிதியத்திற்கு பெற்றுக்கொள்வதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ இதுவரை நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக பாலி கதைப் புத்தகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அச்சிடும் செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சாமநேர கெபகறு பங்களிப்புத் திட்டத்திற்குரிய ரூபா 28 மில்லியன் முதலீட்டிலிருந்து கிடைக்கின்ற வட்டி வருமானத்தில் பங்களிப்புத் திட்டத்தை அமுல்படுத்தப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் அது உரிய பிரகாரம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது மேற்கூறப்பட்ட முதலீட்டில் ரூபா 2,924,716 தொகையான வருடாந்த வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் முறையான திட்டமொன்று இல்லாமையினால் சாமநேர கெபகறு பங்களிப்புத் திட்டத்திற்கு அதில் ரூபா 1,629,460 தொகை அதாவது 55 சதவீதம் மாத்திரமே பங்களிக்கப்பட்டிருந்தது. சாமநேர கெபகறு பங்களிப்புத் திட்டத்திற்காக ஒரு உரித்தாளிக்கு மாதாந்தம் ரூபா 500 படியொன்று மாத்திரம் செலுத்தப்படுவதுடன் நாளதுவரையாக அதனைத் திருத்துவதற்கு நிதியம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) சுனாமி உதவி மற்றும் நால்வகை உதவியாக முறையே ரூபா 1,448,096 தொகை மற்றும் ரூபா 1,348,796 தொகை உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 317,400 பெறுமதியான புத்த ஜயந்தி நாணய இருப்பை விற்பனை செய்யாமல் 4 வருடங்களாக விளைவற்றுக் காணப்பட்டது.

**4.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

சாமநேர நிறுவன மாதாந்த படி கொடுப்பனவு தொடர்பாக பின்வரும் நலிவுகள் மற்றும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் முதல் அமுல்படுத்தப்படுகின்ற 20 சாமநேர நிறுவனங்கள் இருக்கின்றமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய நிதி அறிக்கைகளுடன் 17 நிறுவனங்களுக்குரிய தகவல்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ii) சாமநேர நிறுவனத்திற்காக கொடுப்பனவுப் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை முறையான மற்றும் பூரணமான தகவல்களை உள்ளக்கி பேணப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.2 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையைப் போலவே மீளாய்வாண்டின் போதும் 03 கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்ட ரூபா 28 மில்லியன் பெறுமதியான கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய விடயங்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், கீழே காட்டப்பட்டுள்ள கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(ஆ) நிதிய முதலீடுகள் மற்றும் பயன்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) செயலாற்றல்
(ஈ) புத்தகங்கள் அச்சிடல், விற்பனை மற்றும் களஞ்சியப்படுத்தல்